**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097144

1. District : மாவட்டம் நாமக்கல் — PS: காவல்நிலையம் ஊ.த.த. பிரிவு — Year: ஆண்டு 2018 — FIR No.: மு.த.அ. எண் 6/AC/2018 — Date: நாள் 16-02-2018

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 1) 3.2.2018 காலை சுமார் — Date to : நாள் வரை 2) 06.02.2018 காலை சுமார் 11.30 மணி,
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 11.00 மணி, — Time to : நேரம் வரை 3) 15.02.2018 மதியம் சுமார் 12.30 மணி,
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.02.2018 — Time : நேரம் 16.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-I — Time : நேரம் 16.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : ~~எழுத்து மூலம்~~ / வாய் மொழியாக — வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 கி.மீ கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி தாலுக்கா, அலுவலகம், நாமக்கல்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் கோ. சின்னதம்பி — (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் கோவிந்தசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 50 வயது — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் லாரி தொழில் — (g) Address : முகவரி பரியம்பட்டி, மணாத்தாள் (அஞ்சல்) ஓமலூர் (தாலுக்கா), சேலம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. பாலகிருஷ்ணன், தாசில்தார், நாமக்கல் வட்டம், நாமக்கல்

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   முன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

* GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / ~~பணிக்கப்படும்~~ A.T. ஜெய்குமார் பதவி கா.து.க. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு G. தினகரன்(?)
16-2-2018

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 16/02/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 16.02.2018
காலை 09.00 மணி.

Name: பெயர் A.T. ஜெய்குமார்
Rank: நிலை ....................No எண் .........
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊ.த.க. பிரிவு, நாமக்கல்.

F. [signature]
HC 1101

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/AC/2018 ஊழல் தடுப்பு சட்டம்-1988 பிரிவு 7-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

15.02.2018-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 16.00 மணிக்கு சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மானாத்தாள் அஞ்சல், பரியம்பட்டியைச் சேர்ந்த கோவிந்தசாமி என்பவரது மகன் திரு.G.சின்னதம்பி என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி, காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களிடம் வாய்மொழியாக சொன்ன புகார் வாக்குமூலம் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிரிண்ட் எடுக்கப்பட்டு புகார்தாரரிடம் படித்து காண்பிக்கப்பட்ட புகார் வாக்குமூலத்தின் விபரம் பின்வருமாறு:

நான் ஓமலூர் தாலுக்கா, பரியம்பட்டியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஒரு மகன், ஒரு மகள் இருக்கிறார்கள். நான் ஸ்ரீ கிருஷ்ணா என்ற பெயரில் லாரிகள் வைத்து தொழில் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் 4 டாரஸ் வகை லாரிகள் உள்ளன. அவை வடமாநிலங்களுக்கு வாடகைக்குச் செல்லும். அவ்வப்போது ஊர் பக்கம் லோடு வரும்போது மணல் லோடு ஏற்றிவா லாரியை அனுப்புவேன். தொட்டியம் காவிரி ஆற்று பகுதியில் உள்ள மணல் குவாரியில் இருந்து லோடு ஏற்றிவந்து சேலம் பகுதியில் விற்பனை செய்து வந்தேன். கடந்த இரண்டு மாதங்களாக மணல் குவாரிகளை மூடிவிட்டதால், எனது வண்டி எதுவும் மணல் லோடு ஏற்றி வரவில்லை. கடந்த 03.02.2018-ம் தேதி சனிக்கிழமையன்று எனது TN30 S 9529 என்ற பதிவு எண்ணுள்ள டராஸ் லாரியில் டிரைவர் சேட்டு என்பவர் மோகனூர் அருகில் உள்ள காவிரி ஆற்றிலிருந்து மணல் அள்ளிக்கொண்டு நாமக்கல் வழியாக சேலம் வந்து கொண்டிருந்த சமயத்தில் புதன்சந்தை பைபாஸ் மேம்பாலம் அருகில் காலை சுமார் 11.00 மணிக்கு எனது லாரியை நாமக்கல் தாசில்தார் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் நிறுத்தி மணல் எடுத்துட்டுப்போக ரிகார்டு இருக்கா, அப்படி ரிகார்டு இல்லைனா மாமூல் கொடுத்துட்டு வண்டியை எடுத்துட்டு போ இல்லைன்னா கேஸ் போட்டிடுவேன் என்று கூறியுள்ளார். எனது டிரைவர் தன்னிடம் பணம் இல்லை என்று கூறிவிட்டு எனக்கு போன் போட்டு நடந்த விபரங்களை கூறிவிட்டு தாசில்தாரிடம் போனை கொடுத்தார்.

நான் தாசில்தாரிடம் டிரைவரிடம் இப்போது பணம் இல்லை நான் வந்து கொடுக்கிறேன் வண்டியை விட்டிருங்க என்று கூறினேன். அதற்கு தாசில்தார் இப்ப பணம் இருந்தா கொடுக்க சொல்லு இல்லைனா அது ஆகாது அப்புறம் பாத்துக்கலாம் என்று கூறிவிட்டு போனை கட்செய்துவிட்டார். பின் சிறிது நேரம் கழித்து எனது டிரைவர் போன் செய்து வண்டியை கேஸ் போட்டு தாசில்தார் அலுவலகத்திற்கு எடுத்துசென்று பிடித்து வைத்துக் கொண்டதாக கூறினார். அதன்பின் கடந்த 06.02.2018-ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை சுமார் 11.30 மணிக்கு நானும் எனது டிரைவர் சேட்டுவும் நாமக்கல் தாசில்தார் அலுவலகத்திற்கு வந்து தாசில்தார் பாலகிருஷ்ணன் அவர்களை பார்த்து எனது லாரியை ரிலீஸ் செய்வது சம்பந்தமாக கேட்டோம். அதற்கு தாசில்தார் இதுக்குதான் வண்டியை பிடிச்சப்பவே நான் கேட்ட மாதிரி தனிப்பட்ட முறையில் எனக்கு பணம் கொடுத்து என்ன கவனிச்சிருந்தா நான் கேஸ் போடாமலயே லாரியை விட்டிருப்பேன். நான் உன் டிரைவர்கிட்டேயும் சொன்னேன் உன்கிட்டேயும் சொன்னேன். நீங்க அதை கண்டுக்கல அதனாலதான் கேஸ் போட்டேன் என்று சொன்னார். மேலும் தாசில்தார் எனது வண்டியின் கேஸ் பைலை ஆர்.டி.ஓ. அவர்களுக்கு அனுப்பி வண்டியை ரிலீஸ் செய்து கொடுக்க வேண்டும் என்றால் தனக்கு தனியாக ரூ.10,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்றும் அப்படியில்லையெனில் வண்டி இங்கயேதான் நிற்கும் என்றும் கூறினார். பின் நான் தாசில்தாரிடம் மிகவும் கெஞ்சி என்னிடம் தற்போது பணம் இல்லையென்றும் கேசும் போட்டுட்டீங்க பணமும் ரூ.10,000/- தனியா கேட்கிறீங்க. எனக்கு தொழில் நஷ்டத்தில் உள்ளது பார்த்து பெரிய மனசு பண்ணுங்க என்று கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் கேஸ் போட்டாச்சு அதற்குண்டான பைனை தனியா கட்டிக்கோ எனக்கு ரூ.10,000/- கொடுத்தா பைலை சீக்கிரமா மூவ் பண்ணி லாரியை ரிலீஸ் பண்ண நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டார் இதனால் நானும் சேட்டுவும் அன்றைய தினம் திரும்ப வந்துவிட்டோம். அதன்பின் கடந்த 08.02.2018-ஆம் தேதி வியாழக்கிழமை மீண்டும் நாமக்கல் தாசில்தார் அலுவலகத்திற்கு வந்து தாசில்தாரை பார்க்கச்சென்ற போது அவர் அலுவலகத்தில் இல்லை அதனால் நான் ஆர்.டி.ஓ. அலுவலகம் சென்று எனது லாரியின் மீது போடப்பட்டுள்ள கேஸ் சம்பந்தமாக கேட்டபோது 10 நாட்கள் கழித்து வாங்க என்று கூறினார்கள். அதனால் இன்று 15.02.2018-ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு நான் நாமக்கல் தாசில்தார்

அலுவலகம் சென்று தாசில்தார் திரு.பாலகிருஷ்ணன் அவர்களை பார்த்து எனது லாரியை ரிலீஸ் செய்வது பற்றி கேட்ட போது அவர் லாரிக்கு 30,000/- ரூபாய் பைன் ஆர்.டி.ஓ. ஆபிஸில் கட்ட வேண்டும் என்றும், ஏற்கனவே கேட்ட மாதிரி வண்டியை ரிலீஸ் செய்ய 10,000/- ரூபாய் அவருக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டார். நான் பைன் பணம் கட்டிவிடுகிறேன். உங்களுக்கு தனியாக கொடுக்கச் சொன்ன பணம் ரூ.10,000/- கொடுக்க பணம் இல்லை, கொஞ்சம் பார்த்து செய்யுங்க என்று கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் சரி இப்போதைக்கு ரூ.5000/- முதலில் கொடு ஆர்.டி.ஓ. ஆபிசில் சொல்லி உன்னுடைய பைலை மூவ் செய்து வேலையை முடித்து வண்டியை ரிலீஸ் பன்றதுக்கு நடவடிக்கை எடுக்கிறேன். அந்த பணம் ரூ.5000/- உடன் நாளை வந்து பார். அதற்கு பின் ஒவ்வொரு மாதமும் தவறாமா ரூ.10,000/- மாமூல் கொடுத்துவிட்டு மணல் ஓட்டிக்கோ இல்லையென்றால் உன் வண்டி இங்கேயேதான் நிற்கும் என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார். எனக்கு அவருக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எனது லாரியை ரிலீஸ் செய்ய விருப்பம் இல்லாததால் நாமக்கல் இலஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து புகார் கொடுக்கிறேன். நான் ரூ.5000/-த்துடன் தாசில்தார் திரு.பாலகிருஷ்ணன் அவர்களை சந்திக்க உள்ளேன். எனது லாரியை ரிலீஸ் செய்ய என்னிடம் இலஞ்சமாக ரூ.5000/-ம் பணம் கேட்ட நாமக்கல் தாசில்தார் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். படிக்க கேட்டேன் நான் சொன்னபடி சரியாக உள்ளது. (கையொப்பம்) G.சின்னதம்பி 15.02.2018.

மேற்கண்ட புகார் வாக்குமூலத்தை படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், குற்ற அலுவலர் கையூட்டு கேட்பதை உறுதி செய்யும் பொருட்டும் ஒரு முன்விசாரணைக்கு உத்திரவிடக்கோரி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு, மின்னஞ்சல் மூலம் புகார் வாக்குமூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண்.PE.44/2018/REV/NK, நாள்.15.02.2018-ல் கண்ட உத்திரவுபடி, 15.02.2018-ம் தேதி மாலை 17.30 மணிக்கு குற்ற அலுவலர் திரு.பாலகிருஷ்ணன், தாசில்தார், நாமக்கல் என்பவர் மீது ஒரு முன்விசாரணை பதிவு செய்யப்பட்டது. அந்த முன்விசாரணையில், திரு.G.சின்னதம்பி அவர்களின் மணல் லோடு ஏற்றி வந்த TN30 S 9529 என்ற பதிவு எண் கொண்ட தனது அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள டாரஸ் லாரியை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து ஆணை பெற்று விடுவிக்க குற்ற அலுவலர் திரு.பாலகிருஷ்ணன், தாசில்தார், நாமக்கல் அவர்கள் புகார்தாரர் திரு.G.சின்னதம்பியிடம் அவரது லாரியின் மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குக்கான தண்டத்தொகை அல்லாமல் தனக்கு தனியாக ரூ.5,000/- கையூட்டாக கொடுத்தால்தான் புகார்தாரரின் லாரியை விடுவிக்க ஏற்பாடு செய்வேன் என்று கூறியது உறுதி செய்யப்பட்டது.

ஆகவே, எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதாக முன்விசாரணையில் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 16.02.2018-ம் தேதி காலை 08.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.6/AC/2018 ஊழல் தடுப்பு சட்டம்-1988 பிரிவு 7 -ன்படி எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை கனம் நாமக்கல் மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

16/02/18

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.